2024 பிப்ரவரி 21] [முனைவர் டி.ஆர்.பி. ராஜா]

எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை இல்லை. ஆனால், அவர்கள் அறிவித்த கல்லூரி என்றும் பாராமல், இன்று நமது திராவிட நாயகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த இடத்தில் அந்தக் கல்லூரி மிகச் சிறப்பாக அமைய வேண்டுமென்று எண்ணினார்கள். இப்போது இருக்கிற இட நெருக்கடியில் அந்த இடமும் இப்போது சரியில்லை. அதனால் இன்னும் சரியான இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தில் அந்தக் கல்லூரி நிச்சயமாக நல்ல முறையில் திறக்கப்பட்டு, நல்ல முறையில் நடக்கும் என்ற அந்த உறுதியை இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், எந்தவொரு கவலையும் கொள்ளத்தேவையில்லை. அவர்களது ஆட்சியில் வந்த திட்டமாக இருந்தாலும் சரி, திராவிட நாயகன், திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், எடுக்கப்பட்ட திட்டமாக இருந்தாலும் சரி, திருவாரூர் மாவட்டத்திற்குத் தேவையான அனைத்துத் திட்டங்களும் படிப்படியாக, மிகப் பிரம்மாண்டமான அளவில் அனைத்துத் தேவைகளையும் நிச்சயமாகப் பூர்த்தி செய்யும் வகையில் நிறைவேற்றப்படும். இந்த இடத்தில் நிச்சயமாக அந்தக் கல்லூரி நல்லமுறையில் அமையும் என்ற உறுதியை அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடம். நீங்கள் கேட்டுக்கொண்டு. . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) சொல்கிறேன். இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடுகள்) சொல்கிறேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாகத்தான் நிலம் வாங்கியிருப்பார்கள். அந்த document-ஐப் பார்ப்பதெல்லாம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வேலை. உங்களிடம் சரியான இடம் இருந்தால் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கொடுங்கள். அதன்மூலம் வந்தால் பரிசீலனை செய்யலாம்.*

(இ) ஜல்லிக்கட்டு, ஆன்லைன் டோக்கன் முறையை இரத்து செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

[2024 பிப்ரவரி 21

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே ருசித்துப் பார்ப்பதற்கு பல விஷயங்கள் இருந்தாலும், ரசித்துப் பார்ப்பதற்கு ஒரு சில விஷயங்கள் மட்டும்தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படி எல்லோருமாக தாத்தா, பாட்டி, பேரன் வரை பெண்கள் முதல் இளைஞர்கள் வரை எல்லோரும் பரவசத்தோடு ரசித்துப் பார்க்கக்கூடிய தமிழருடைய பண்பாட்டையும், வீரத்தையும், கலாச்சாரத்தையும் நிரூபிக்கக்கூடிய ஜல்லிக்கட்டு சம்பந்தமாக பேச அனுமதித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ஜல்லிக்கட்டு விழா எடுக்கக்கூடிய, விழா கமிட்டிக்கு இந்த அரசு துணை நிற்க வேண்டும். 700 மாடுகளுக்குக் குறையாமல் அந்த விதிமுறையைப் பின்பற்றி நடத்தலாம். அதோடு சேர்த்து நான் தொடர்ந்து வலியுறுத்துவது online token–ஐ இரத்து செய்ய வேண்டும் என்பதுதான். புதுக்கோட்டை உள்ளிட்ட ஒரு சில மாவட்டங்களில் இந்த online token இரத்து செய்யப்பட்டிருக்கிறது. திருச்சி, மணப்பாறை போன்ற பகுதிகளில் online token கொடுக்கிறார்கள். “வீட்டை கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்” என்று சொல்வோம். 10 கல்யாணம் நடத்துவது போன்றது ஒரு ஜல்லிக்கட்டை நடத்துவது என்பது. அப்படிப்பட்ட ஜல்லிக்கட்டு நடத்தக்கூடிய, அந்த ஆர்வம் குறையாமல், பாரம்பரியம் மாறாமல் வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கக்கூடிய பாரம்பரிய முறைப்படி கிராம கமிட்டியே token–ஐ வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றாகத் திருமணம் நடத்திவிட்டு, பந்தியில் உட்காருபவர்களுக்கு Online–ல் பதிவு பண்ணுங்கள் என்று எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், போதும்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: அதுபோல, அவர்களை கவனிக்கக்கூடிய வகையில், கிராம கமிட்டி மூலமாக Token–ஐ வழங்கக்கூடிய நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிபடுத்துவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 பிப்ரவரி 21]

***மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, திருமணத்தில் பந்தியில் உட்காருவதற்கு Token கொடுக்கப்படுமா என்று சொன்னார்கள். இது திருமணம் அல்ல; இரண்டு நாட்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்து, அந்த மாடுகளை ஆய்வு செய்து, அதற்குப் பின்பு அனுமதி கொடுக்கப்படுகின்ற மாடுகள்தான் அதில் கலந்துகொள்ள முடியும். ஆனால், திருமண வீட்டில் அப்படி கிடையாது. திருமண வீட்டில் சாப்பிட வருகிறவர்களை இப்படி, அப்படி என்று சொல்வது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பமை உச்ச நீதிமன்றம், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நடத்துகிறபோது, அதில் பங்கேற்கும் காளைகளுக்குத் தேவையற்ற துன்பம் மற்றும் வலிகளை ஏற்படுத்தும் வகையில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தடை விதிக்கப்பட்டது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்விதமாகவே ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்துவதற்கு, நிலையான வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் காளைகள் பங்கேற்பதற்கான பதிவேற்றமும் முக்கியமானதாகும். இந்த வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையிலே, 5 நீதியரசர்கள் கொண்ட அரசியல் சாசன அமர்வு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி அளித்து, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளை முடித்து வைத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளை உரிமையாளர்களுக்கு பதிவேற்றம் செய்யும் முறையை எளிதாக்கவும், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கும் காளைகளின் எண்ணிக்கையை மேம்படுத்தவும் இணையவழி பதிவேற்றம் உதவுகிறது. மேலும், நிகழ்ச்சி நடைபெறும் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே, காளைகள் கால்நடை மருத்துவரால் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு, இணையவழி பதிவேற்றம் செய்யப்படுவதால், காளைகளின் நலனும் உறுதி செய்யப்படுகிறது.

நண்பகல் 12-00

மேலும், தகுதிவாய்ந்த முன்னனுமதி பெற்ற காளைகள் மட்டுமே நிகழ்ச்சியில் பங்கேற்க அனுமதிக்கப்படும் என்ற விழிப்புணர்வு காளை உரிமையாளர்களுக்கு ஏற்படுவதுடன், நிகழ்ச்சி

[திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்] [2024 பிப்ரவரி 21

நடைபெறும் நாளில் எவ்வித குழப்பமுமின்றி, நிகழ்ச்சிகள் நடத்த இது வழிவகுக்கின்றது. காளைகள் தேவையற்ற அலைச்சல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி, விலங்குகள் வதைத் தடைச் சட்டத்தின்படியும், காளைகளை எவ்விதத் துன்புறுத்தலுக்கும் ஆளாக்காமல் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டுமென்பதாலும், நிகழ்ச்சி நடைபெறும் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே பங்கேற்கும் காளைகளின் எண்ணிக்கையை முறைப்படுத்திடவும், ஆன்லைன்மூலம் காளைகள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிக்குப் பதிவு செய்யப்படுவதால், காளைகள் தேவையற்ற வலிகள் மற்றும் துன்பங்களுக்கு ஆட்படுவதில்லை என்ற காரணங்களால், இணையவழிப் பதிவேற்றம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். எனவே, இப்பொருள் குறித்து தற்போது மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

6. கவன ஈர்ப்பு

எண்ணூர், கோரமண்டல் உரத் தொழிற்சாலையில் அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு. ஜெகன் மூர்த்தி, திரு. S.S. பாலாஜி, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. கு. சின்னப்பா, திரு. மு. பூமிநாதன், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. தி. வேல்முருகன், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. மா. சின்னதுரை, திரு. இரா. அருள், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள். Agenda-வில் இருப்பது குறித்து மட்டும் சுருக்கமாக அரசின் கவனத்தை ஈர்த்து, அமருங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரில் இயங்கி வரும் கோரமண்டல் உரத் தொழிற்சாலையில் அம்மோனியா வாயு வெளியேறியது குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.